மாதர் போதினி

No. 254 பெப்ருவரி 1919 No. 2

MARY MAGDALENE

மகதலேனா மரியாள்

மகதலேனா மரியாள் கலிலேயாக் கடலோரத்திலுள்ள மகதலே என்ற ஊரில் வசித்த ஓர் ஸ்திரீ. இந்த ஊர் எருசலேம் பட்டணத்திலிருந்து ஏறக்குறைய எழுபத்தைந்து மைல் தூரத்திலுள்ளது. நமது அருமை இரட்சகர் இத்தாரணியில் அவதரித்து இரட்சணிய வேலையை நிறைவேற்றுங்கால் இந்தக் கடலோரத்திலுள்ள கிராமங்களுக்கு அடிக்கடி சென்று தம் ஊழியத்தைச் செய்தார். மகதலேனா மரியாளுடைய பூர்வீக ஜீவியவரலாறு தெரியாவிடினும் ஆங்காங்கு நாலு சுவிசேஷகர்களும் இவளைப்பற்றி எழுதியிருக்கிறார்கள். இந்த மரியாளின் சரித்திரத்தினால் நமக்கு அநேக படிப்பினைகள் உண்டு. ஆயினும் ஐந்து விசேஷித்த குறிப்புகளைக் கவனிப்பது நலமெனத் தோன்றுகின்றது.

முதலாவது, பிசாசு பிடித்தவள்: நமதாண்டவராகிய கிறிஸ்து கிராமங்கள்தோறும், பட்டணங்களெங்கும், வீதிகள் எல்லாம் சுவிசேஷ செய்தியைக் கூறி அறிவித்து, பாவபந்தங்களால் கட்டப்பட்டவர்களை அவிழ்த்துவிட்டு சத்துருப் பிசாசின் கிரியைகளை அழித்துக் கொண்டே திரிந்தலையும்போது எப்படியோ, எந்த இடத்திலோ, இந்த மகதலேனாள் என்னப்பட்ட மரியாள் ஏழு பிசாசுகள் பிடித்திருந்தவளாகக் கண்டு அவைகளைத் துரத்திவிட்டார். இவளுடைய வாலிபப்பிராயத்திலே இவள் துன்மார்க்கமான ஜீவியமுள்ளவள். பாவ ஜீவியம் நிச்சயமாகவே நிர்ப்பாக்கியத்தையும், துன்பங்களையும், நோய்களையும், தரித்திரங்களையும் கொண்டுவருவதோடு சில வேளைகளில் பிசாசுகளும் தங்கித் தரிக்கும்படியான தன்மையாகிவிடுகிறது. சரீரத்தின் அழகும் பெலனும் போனபின் சாத்தானின் குடியிருப்புக்கு

இடமானுளென்பதற்குச் சந்தேகமில்லை. பிசாசின் கிரியைகளை அழிக்கும்படிக்கே வெளிப்பட்ட தேவகுமாரன் இந்தப் பெண்ணைப் பிடித்திருந்த ஏழு பிசாசுகளையும் அகற்றிவிடாமலிருப்பாரா? 'ஏழு பிசாசுகள் நீங்கின மகதலேனு மரியாள்' என்று பரி. லூக்கா எட்டாம் அதிகாரத்தில் சொல்லியிருக்கிறது. நமது கேடுகளெல்லாம் இயேசுகிறிஸ்துவினுல்தான் அகலவேண்டும்.

இரண்டாவது, பாவியான ஸ்திரீ: நமது இரட்சகராகிய கிறிஸ்து இந்தச் சரித்திரத்தின் மூலமாய் நிச்சயமாகவே பாவிகளின் நேசனென்றும் பாவநாசனென்றும் எல்லாருக்கும் தெளிவாய் விளங்கும். பரி. லூக்கா என்பவர் தம் சுவிசேஷம் ஏழாம் அத்தியாயம் முப்பத்தாரும் வசனத்திலிருந்து சொல்லிக்கொண்டு போகிறபோது பரிசேயனுகிய சீமோன் பேரில்லாமல் அழைக்கிற பாவியான ஸ்திரீ இவள்தானென்று பலகாரணங்களினுல் அனுமானிக்கக்கூடும். இந்த ஸ்திரீ நமது இரட்சகருடைய ஊழியத்தின் ஆரம்பத்தில் மகதலே ஊரிலிருந்த பரிசேயனுகிய சீமோன் செய்த விருந்து நேரத்தில் ஒரு பரணியில் பரிமளதைலம் கொண்டுவந்து காருண்ணிய கர்த்தாவின் பின்பக்கத்தில் அழுது நின்ருள். பின் ஆருய் ஓடின தன் கண்ணீரினுல் அவரது பாதங்களைக் கழுவலுற்ருள். கழுவின பின் துடைப்பதற்கு தன் அழகிய கூந்தலை உபயோகித்தாள். இந்த சம்பவத்திற்குமுன் இயேசு புண்ணியன் ஏழை நாயீன் விதவையின் கண்ணீர்துடைத்து மரித்துப் பாடையில் வைக்கப்பட்ட அவளது ஒரே அருமைக் குமாரனை எழுப்பிக்கொடுத்து, அதிலிருந்து இருபது மைல்தூரம் நடந்து களைத்து மகதலே சென்றபோது இந்தப் பெருமையுள்ள சீமோன்தானும் கால்கழுவத் தண்ணீர் கொடுக்கவில்லை. இவளோ ஆண்டவன் கால்களைக் கண்ணீர்கொண்டு சுத்திசெய்து தலைமயிரால் துடைத்து பரிமளதைலம் பூசி நின்ருள். அத்தருணத்தில் விருந்திற்கழைத்த சீமோன் குறைகூறி முறுமுறுத்து நின்ருன். இரட்சா பெருமான் ஸ்திரீயின் சிறந்த கிருத்தியங்களை ஒவ்வொன்ருய் விரித்துரைத்து வியந்தருளினுர். மகதலேனு மரியாளும் சீமோனும் ஒரே ஊரார். ஆனதுபற்றி சீமோனுக்கு மரியாளின் சகல துர்க்கிரியைகளும் பாவங்களும் நன்ருய்த் தெரிந்திருந்தபடியினுல் அவளைப் பாவியென்று சொல்லி இகழுகிருன். இவன் செய்ததுபோல் நாம் பாவத்திலிருக்கிறவர்களை நிந்தித்து அவமதித்து எங்கும் தூற்றலாகாது. அப்படிப்பட்டவர்களுடைய குணப்படுதலுக்காக ஜெபிப்பதே நன்று. பிரதான ஆசாரியரும் மூப்பரும் ஒரு தடவையில் நமதாண்டவரிடம் வந்து 'நீர் எந்த அதிகாரத்தினுல் இவைகளைச் செய்கிறீர்? இந்த அதிகாரத்தை உமக்குக் கொடுத்தது

யார்?' என்று கேட்டபொழுது யோவான்ஸ்நானன் விஷயத்தைக் கொண்டு அவர்களுடைய வாயை அடைத்தபின், அவர்களைப்பார்த்து 'ஆயக்காரரும் வேசிகளும் உங்களுக்கு முன்னே பரலோக இராஜ்யத்தில் பிரவேசிக்கிறார்கள்' என்றார். ராகாப்பென்ற வேசி, சமாரிய ஸ்திரீ, விபசாரத்தில் கண்டுபிடிக்கப்பட்ட ஸ்திரீ, மகதலேனா மரியாள் என்பவர்களை மனத்தில்கொண்டு அப்படிச் சொன்னார். இந்த ஸ்திரீயினுடைய பாவங்களெல்லாம் அன்று மன்னிக்கப்பட்டன. இவள் சமாதானம் பெற்றாள், உத்தமியானாள். பாவிகளை இரட்சிக்க இயேசுகிறிஸ்து உலகத்தில் வந்தார் என்பது மெய்.

மூன்றாவது, ஊழியஞ் செய்தவள்: துன்மார்க்க ஜீவியம்செய்து பிசாசுபிடித்திருந்த இவள், பிசாசு நீங்கினபின் சுயபுத்தியடைந்து பாவவுணர்ச்சியுள்ளவளாய் சீமோனின் விருந்துவீட்டில் பிரவேசித்து இரட்சகரிடம் பாவமன்னிப்பைப் பெற்றுக்கொள்ள ஆசித்து, தனக்கு நலமென்று கண்டதையெல்லாம் அவருடைய பாதத்தில் தத்தம்செய்தாள். பாவநாசர் பாவங்களையெல்லாம் பூரணவாய் மன்னித்துச் சமாதானம் கூறினார். உடனே இந்த மகதலேனா மரியாள் தேவனுடைய ஊழியத்துக்குத் தன்னை ஒப்படைத்தாள். உத்தம பெருமாட்டிகளோடு சேர்ந்து தன் ஆஸ்திகளால் ஊழியஞ்செய்யத் தலைப்பட்டாள். ஊழியத்திலிருப்பர்கள் வசனத்தில் நிலைத்திருப்பார்கள். பரிசுத்த ஜீவியம் துளிர்த்துக் கனிகொடுக்கும். இரட்சிக்கப்பட்டவன் ஊழியஞ்செய்யாவிடில் இருதயம் படிப்படியாய் வெறுமையாகி தன்னிலும் பொல்லாத வேறு ஏழு ஆவிகள் புகுந்தவன் ஒப்பனை போலாகும். ஊழியமில்லா ஜீவியம் உயிரில்லா ஜீவியம்.

நான்காவது, அன்புகூர்ந்தவள்: இவளுடைய அன்பு அளவற்றது. நமது இரட்சகர் மரணாக்கினைக்குட்படுத்தப்பட்டது முதல் உயிர்த்தெழுந்தது வரை இவளுக்கிருந்த சஞ்சலம் கொஞ்சமல்ல. பொல்லாத மனுஷர்கள் மூர்க்காவேஷங்கொண்டு தங்கள் அக்கிரமச் செய்கைகளைக் காண்பிக்கும்போது அன்பு எத்தன்மையுள்ளதென்று விளங்குகின்றது. நமது இரட்சகர் சிலுவைசுமந்து கொல்கதா செல்லும்போதும், அவரைக் கல்வாரியில் சிலுவையிலேற்றும்போதும் அன்பு விளங்கினது. மகத்துவன் தம் அன்பைக்காட்ட சிலுவையில் ஏறி ஐந்து ஊற்றுக்கண்களைத் திறந்து இரத்தப்பிரளயம் செய்தனர், உத்தமமும் ஊக்கமுமான அன்புள்ள மகதலேனா மரியாள், ஏசுவின் தாயாகிய மரியாள், சூசன்னாள், யோவன்னாள், கிலேயோப்பா மரியாள், சாலோமை என்பவள், இன்னும் மற்ற ஸ்திரீகளும் மார்பிலடித்து தங்கள் தங்கள் இரண்டு கண்களிலிருந்து தண்ணீர் பொங்கவிட்டு அன்புப்பிரவாகம் செய்தனர். இப்படியாக கல்வாரிமலைச்

சார்பிலே போரும், சிற்ருறுகளும் ஒன்றுகூடின. எண்பத்தைந்தாம் சங்கீதம் பத்தாம் வசனத்திலிருந்து பன்னிரண்டாம் வசனமுடிய சொல்லியிருக்கிறபடி அன்பும் அன்பும் சந்தித்தது, முத்தம் செய்தது, தாழப்பார்த்தது போலாயிற்று. மகதலேனு மரியாளின் உன்னத அன்பும் பாசமும் ஆண்டவரைக் கல்லறையில் வைத்தபிறகு இன்னமும் அதிகமாய் விளங்கிற்று. அவளுக்கு இன்னது செய்கிறதென்று தெரியவில்லை. ஐயோ தனித்தவளாய் கல்லறைத் தோட்டத்திற்கு ஓடுவாள், திரும்ப வீடுவருவாள். மறுபடியும் ஓடுவாள், மறுபடியும் வருவாள். இப்படிக் கந்தவர்க்கத்தைக் கையிலேந்தி அங்கலாய்த்தவளாயிருந்தாள். நமது இரட்சகர் திருச்சரீரம் கல்லறையிலிருந்த மூன்று நாட்களையும் கல்லறைக்கு ஓடுவதிலும் அழுகையிலும் செலவழித்தாள். அவளை ஆற்ற சீஷர்களால் கூடவில்லை, மற்றவர்களாலும் கூடவில்லை. அந்தப் பெண் காட்டின அன்பைப்போல் யார் காட்டக்கூடும்? உயிரோடே வலுவும் செயலுமாயிருந்தால் அன்பு காட்டுவது சகஜம். ஆனல் மரணத்தினல் மறைந்தபின் அன்பு பாராட்டுவது அருமை.

ஐந்தாவது, தரிசித்தவள்: ஆண்டவரைக் காணேமே என்று அங்கலாய்த்த மரியாளுக்கு ஆண்டவரைக் காணமற்போனல் என்ன மனவுடைவு உண்டாயிருக்கும்! கருணை நிறைந்த கர்த்தருக்கு எல்லாவற்றையும் அறிந்து அதற்கேற்றவிதமாய் ஆதரிக்கத் தெரியும், அரவணைக்கத் தெரியும், தற்காக்கத் தெரியும், தாபரிக்கத் தெரியும், தரிசனைகொடுக்கத் தெரியும். அன்புள்ளவர்களை அறிவார், அவரைப் பற்றிய அறிவுள்ளவர்களை அறிவார், தியானிக்கிறவர்களை அறிவார், திடனற்றவர்களை அறிவார், ஜெபிக்கிறவர்களை அறிவார், வாஞ்சையுள்ளவர்களை அறிவார், எல்லாம் அறிவார். ஈயம்போல் இளகி ஆண்டவர்பேரில் ஆவல் பொங்கின மரியாளுக்கு தாம் உயிர்த்தெழுந்தபின் முதல் தரிசனை கொடுக்கச் சித்தங்கொண்டார். பகிரங்கமாய் மறுதலித்துப் படுபாவியாய்ப்போய் மனங்கசந்து அழுத பேதுருவுக்குத் தனித்தரிசனம் கொடுத்துத் தற்காக்க மறவாதிருந்தார். இந்த உலகத்திலே இயேசுவோடு அரசாட்சிசெய்யவேண்டுமென்று விரும்பியிருந்த யாக்கோபுக்குத் தப்பிதத்தைக் கண்டித்தாலும் அவனுடைய உண்மையான ஜீவியத்தையும் நோக்கத்தையுமறிந்த கடவுள் அவன் திருச்சபை விருத்திக்கு இரத்தமுத்திரை போடப்போகிருனென்று கண்டு ஓர் விசேஷித்த தரிசனைகொடுக்க அவருக்குத் தெரியும். அகாலப்பிறவிபோன்ற பவுலுக்குக் காட்சிகொடுத்து தமது சபையைத் திடப்படுத்த அவர் அறிவார். இப்படியாகத் தம்முடைய பிள்ளைகள் எத்தன்மையாயிருந்தாலும் அவர்கள் மனமறிந்து உத்தமத்

துக்கேற்றவிதமாய் அவர்களுக்குத் தம்மை வெளிப்படுத்தாமலிருக்க மாட்டார். ஆகையால் தேவனுடைய பிள்ளைகளே, கடவுளுடைய வெளிப்படுத்தல்களை உணர்ந்து நன்குமதித்து ஜீவியுங்கள்.

'மண்டலத்தில் மகதலா மரிபவ மகற்றீர்
வலது கண்ணனுக் கிரக்கம் வைத்துமே வழுத்தினீர்
கண்டு திமிர்வாதரோகி கன்மபாவ மாற்றினீர்
கண்ணுறச் சீமோனையுங் கடாட்சம்வைத்து நோக்கினீர்
தொண்டர்துன்பம் யாவையுந் துயர்க்குருசி லேற்றினீர்
சொல்லுதற் கதீததீத துய்யதுய்ய துய்யனே
எண்டிசைக்கு ளென்பவத்தை யும்பொறுத் திரங்கவென்
றேகனுக் குரைக்கவேணும் யேசுநாத சுவாமியே.'

V. D. Kailasam.

'FIRE IF YOU DARE'

'உங்களுக்குத் தைரியமுண்டானால் சுடுங்கள்'

கியுபாத் தீவு ஸ்பானியா தேசத்தின் குடியேற்று ஸ்தலம். கொஞ்சக்காலத்துக்குமுன் அங்கே ஒரு கலாபனை உண்டாகவும், அதை அடக்க ஸ்பானிய இராஜாங்கத்தார் போர்வீரரை அனுப்பினார்கள். பிரித்தானியப் பெற்றோருக்குப் பிறந்தவரும், அமெரிக்கக் குடிவாசியுமான ஓர் கப்பற்காரர் ஸ்பானிய இராஜாங்கத்துக்கு விரோதமாய்ப் பட்டாளம் சேர்த்ததாகக் குற்றஞ்சாட்டப்பட்டுக் காவலில் போடப்பட்டார். அவர் யதார்த்தத்தில் குற்றவாளி என்று ரூபிக்கக்கூடாதிருந்தது. அவரை நன்றாய் அறிந்தவர்கள் அவர் நிரபராதி என்று சாதித்தார்கள். ஆயினும் அதிகாரிகள் அவரைக் குற்றவாளியாகத் தீர்த்து அவரைச் சுட்டுப்போடத் தீர்ப்பு விதித்தார்கள். இங்கிலிஷ் ஸ்தானாபதியாகிய மிர். ரூம்ஸ்டென் (Ramsden) என்பவரும், அமெரிக்க ஸ்தானாபதியும் ஒன்றுசேர்ந்து மேற்படி தீர்ப்பு அநீதியென்றும், கப்பற்காரர் நிரபராதியென்றும், இங்கிலாந்தின் பேராலும் அமெரிக்காவின் பேராலும் தர்க்கவாதம் செய்து கைதியை உடன் விடுதலைசெய்யக் கேட்டார்கள். மேலும் அநீதியாய்க் கைதியின் ஜீவனை வாங்கிப்போடுகிறதானால் அமெரிக்க, இங்கிலிஷ் இராஜாங்கத்தார் அவ்வாறு செய்வோரைக் கொலை பாதகக் குற்றத்துக்கு உத்தரவாதிகளாக்குவார்கள் என்றும் சொல்லி ஸ்தானாபதிகள் முறையிட்டார்கள். ஆயினும் அதிகாரிகள் அவர்களுடைய வார்த்தைகளை லக்ஷியம்பண்ணவில்லை.

மரணத்துக்குக் குறிக்கப்பட்ட தினம் காலையில் போர்வீரர் குற்றவாளியாகத் தீர்ப்பு விதிக்கப்பட்டவரை கொலைக்களத்துக்கு வழி நடத்தினார்கள். அவரது ஜீவனை வாங்கிப்போடப் போர்வீரர் நியமிக்கப்பட்டார்கள். ஸ்தானாபதிகளும் கொலைக்களஞ்சென்று இரு இராஜாங்கத்தாரின் பேராலும், அத்திரள் கூட்டத்துக்கு முன்பாக ஆட்சேப அறிக்கை ஒன்று எழுதி வாசித்தார்கள். கொலைக்கு நியமிக்கப்பட்ட கைதி மரணத்தை எதிர்பார்த்து சோர்புற்றுத் தரையில் விழத்தக்க நிலைமையிலானார். அதிகாரிகள் திரும்பவும் கூடி ஆலோசனை செய்து, சமயம் பிந்திப்போனபடியால் ஆட்சேப அறிக்கையைக் கவனிக்க ஏதுவில்லையென்றும் மறுத்துவிட்டார்கள். கைதி ஸ்பானிய இராஜாங்கத்துக்கு விரோதமாய்த் துரோக நடபடிகள் நடத்தியிருப்பதால் மரணத்தீர்ப்பை மாற்ற ஏதுவில்லையென்றும் சொல்லிவிட்டார்கள்.

உடனே இங்கிலிஷ் ஸ்தானாபதி பிரித்தானியக் கொடியைக் கொண்டுவந்து அந்தக் கைதியை அதால் சுற்றிப் பொதிந்து அவரும் அதோடு சேர்ந்து நின்றுகொண்டு: 'துரைமக்களே! பிரித்தானிய ஸ்தானாபதியாகிய நான் நிரபராதியாகிய ஒருவரின் ஜீவன் அநியாயமாய் வாங்கப்படுவதைப் பார்க்கச் சகியேன். அவரது ஜீவனைப் பாதுகாப்பது என்னைப் பொறுத்த கடமை. உங்களுக்குத் தைரியமுண்டானால் என்னையும் இந்தக் கொடியையும் ஊடறுத்து இவரைச் சுட்டுவிடுங்கள்' என்று தம் கண்களில் அக்கினிப் பொறிகள் பறக்கச் சத்தமிட்டுச் சொன்னார். நட்சத்திர ரூபம் அமைந்து பிரகாசித்த அமெரிக்கக் கொடியை அமெரிக்க ஸ்தானாபதி சுமந்து வந்து அதால் கைதியைப் பொதிந்து அவரும் அக்கைதியோடு சேர்ந்துகொண்டார். கைதியின் உள்ளம் இக்காட்சியைக் கண்டு பொங்கினது. அவர் கண்களிலிருந்து தாரை தாரையாய்க் கண்ணீர் பாய்ந்துகொண்டிருந்தது. ஸ்பானிய அதிகாரிகள் முற்கூறிய நடபடிகளைக் கண்டு ஒன்றும் பேசக்கூடாமல் சுவர் ஓவியம்போல் அசையாமல் நின்றுவிட்டுத் திரும்பவும் ஆலோசனைக்கூட்டம் கூடி அக்கைதியின் ஜீவனை வாங்கத் துணியாமல் அவரை விடுதலை செய்தார்கள்.

ஒரு உடன் சிருஷ்டியின் ஜீவனைப் பாதுகாக்க மேற்படி புருஷோத்தமர் நடத்திய அரிய நடபடி எவர் மனதையும் கருஷிக்கத் தக்கதே. போர்வீரர் அக்கைதியைச் சுட்டுக் கொல்லத் துணிவு கொள்ளாததும், அவ்வாறு செய்ய உத்தியோகஸ்தர் உத்தரவு கொடாததும் அதிசயமல்லவே. ஏதோ ஒரு அதிசய சத்துவம் அந்த நடபடிக்குள் இருந்தது. வீரத்துவ ஆவியும் தீவிர யுக்தியும் நிறைந்த

இங்கிலிஷ் ஸ்தானபதியின் அருஞ்செயல் பிரித்தானியா இராஜாங்கத்துக்கு மகிமையாம்.

இச்சம்பவம் இயேசுகிறிஸ்துவின்மூலம் பாவி இரட்சிப்படையும் விதத்தை விளங்கவைக்கிறதல்லவா? அவர் ஒவ்வொரு விசுவாசியையும் தமது நீதியின் காவலுக்குள் வைத்துப் பாதுகாக்கிறாரல்லவா? ஓ பாவி! நீ பயப்படத் தேவையில்லை. அவர் தம்முடைய சிலுவைக் கொடியுடன் வந்து நிற்கிறார். அவரண்டை ஓடி வா.

THE POWER OF THE GOSPEL TO SAVE DRUNKARDS

குடியரை இரட்சிக்க சுவிசேஷம் பெலனுள்ளது

மேற்படி சத்தியத்திற்குத் திருஷ்டாந்தமாக குஷ்மன் என்னும் டாக்டர் சொல்லுகிறதாவது: பெத்சாயிதா மிஷனைச் சேர்ந்த ஒருவன் 'தேவன் என் பாவங்களை மன்னித்திருக்கிறார், அதோடு என் மனைவியும் எனக்கு மன்னித்துக்கொண்டாள்' என்றான். இவனுடைய சரித்திரத்தை அறிந்தவர்கள் இவன் கண்களில் சொரியும் ஆனந்தக் கண்ணீரில் வானவில்லின் பிரதிவிம்பத்தைக் கண்டார்கள். தன் பாவத்தை நினைத்தவுடனே தலைகிறக்கம் பிடித்தவன்போலாகி முகலக்ஷணம் அற்றுப்போயும், சீக்கிரத்துக்குள்ளாக அலங்கார சித்திரத்தின்மேல் ஒளி வீசினதுபோல இவன் முகம் பிரகாசித்து ஜொலித்தது. இந்த மனுஷன் 22 வருஷமாய் கொஞ்சம் கொஞ்சம் மது குடித்துவந்து பிறகு அதனால் ஆட்கொள்ளப்பட்டு ஆறுமாசமாய் வீட்டைவிட்டு அலைந்து மிகவும் இழிவும் கேவலமுமான ஸ்திதியில் மிஷனைச் சேர்ந்தான். அங்கே திவ்விய சுவிசேஷம் இவன் இருதயத்தில் கிரியைசெய்து இவனை எழுப்பிவிட்டது. இவன் மதுவிலக்குப் பத்திரத்தில் ஒப்பமிட்டுக் கிறிஸ்துவைத் தன் இரட்சகராக ஏற்றுக்கொண்டான்.

குணப்பட்ட ஒரு மனுஷன் தன்னைப்பற்றி, இரட்சிக்க கிறிஸ்து வல்லமையுள்ளவரென்பதைக் காட்ட, 'நான் நடந்துதிரியும் விளம்பரமாயிருக்கிறேன்' என்றான். பதினைந்து வருஷங்களுக்கு முன் இந்த மனுஷன் பிலதல்பியாவிலுள்ள ஜனங்களில் மகா பொல்லாதவனாயிருந்தான். இவன் மது உண்டாக்கி வியாபாரஞ்செய்து, தானே குடித்து, மகா கெட்டவனாய் நிர்ப்பந்த உழையிலாழ்ந்தான். இப்படி இருக்கையில் இவன் குணப்பட்டு நல்ல சுவிசேஷப் பிரசங்கியானான். எப்போதும் தெருப்பிரசங்கங்கள் நடத்துவதோடு எப்போ தன் எஜமானுக்காக வேலைசெய்ய இடைகிடைக்குமென்று

தாபந்தமாய் தேடுவான். இவன் சாதாரணமாய் கடலில் வேலை செய்கிறவனானதால் இவன் யாத்திரைசெய்த கடலிலெல்லாம் இவன் பிரயாசத்தால் சிலர் கிறிஸ்துவண்டை கொண்டுவரப்பட்டார்கள். இவனால் ஏற்படுத்தப்பட்ட மிஷன்கள் எல்லாம் மகா சித்திபெற்றன. இவன் சாராய வியாபாரத்தை விட்டபின், இவனுடைய குடும்பம் தரித்திரத்தால் மகா நிர்ப்பந்தத் தசையிலிருந்தது. ஆனாலோ, இவன் குடும்பத்தைப் பார்க்கிறவர்கள், தேவனுக்காகக் காத்திருக்கிறவர்களுக்கு ஒரு நன்மையும் குறைவுபடாதென்று சாட்சிகொடுப்பார்கள்.

A TEMPERANCE SONG

மதுவிலக்குப் பாடல்

1 கள்ளுச் சாராயங் குடியாதே இனிக்
கஞ்சா வெறியால் மயங்காதே
உள்ள மயங்கிடும் கண்ணுஞ் சிவந்திடும்
ஓட்டாண்டி யாகுவாய் மானிடனே.

2 அல்லும் பகலு மொழியா வெறியாலே
ஆனந்தப் பாட்டுகள் வந்திடுமே
நல்லதென்றே யெண்ணிக் கொள்ளாதே மிக
நையாண்டி செய்குவாய் மானிடனே.

3 வார்த்தை குளறிடும் வாயது நாறிடும்
வம்பான வார்த்தைகள் பேசச்சொல்லும்
பார்த்தவர் கெட்ட குடிகாரனென் றுன்னைப்
பகிரங்கமாய்ச் சொல்லுவார் மானிடனே.

4 கொஞ்சங் கொஞ்சங் குடித்திடுவாய் பின்பு
கூடும் பொருளை அழித்திடுவாய் பின்
மிஞ்சக் கடன்களும் வாங்கிடுவாய் நல்ல
மேனி மெலியுமே மானிடனே.

5 நித்தம் நினைப்பாகவே இருக்குஞ் சற்று
நேரங் குடியா திருந்துவிட்டால்
பித்தம் பிடித்தவன் போலிருக்குங் கெட்ட
பிரமை யுண்டாகு மானிடனே.

6 கண்ட பொருளை யடகுவைப்பா யேதும்
கையில் வருவதை மோசஞ்செய்யும்
சண்டாளமான வெறிசெய்து வைத்திடும்
சற்பனை கேளப்பா மானிடனே.

THOUGHTS ON THE END OF THE WAR

மகாயுத்த முடிவைப்பற்றிய தியானம்

ஆத்துமாவே! ஆண்டவரின் பலத்த கிரியைகளை ஆழ்ந்து தியானிப்பாயாக. கடந்த நாலு வருஷகாலமாய் வையகமுழுவதையும் நடுநடுங்கவும் கிடுகிடுங்கவும் செய்த மகா யுத்தத்துக்கு முடிவுண்டாயிருக்கிறது என்னும் நற்செய்தி மேதினி முழுவதிலும் பெரும் குதூகலத்தை உண்டுபண்ணிவிட்டது. நாலுவருஷகாலமாக நீதியோ, பராக்கிரமமோ, எது ஜெயிக்கும் என்னும் சமுசய வாதம் உலகமுழுவதிலும் பரம்பியிருந்தது. பராக்கிரமமே ஜெயிக்கும் என்று ஜெர்மனியும், நீதிநியாயமே ஜெயிக்குமென்று பிரித்தானியாவும் எதிர்பார்த்துக்கொண்டிருந்தது. கடவுள் பராக்கிரமத்தின் கடவுளல்ல, நீதிநியாயத்தின் கடவுள் என்று இப்போது சர்வ உலகமும் சர்வ சம்மதமாய் ஒப்புக்கொள்ளுகிறது.

ஐயோ! இந்தப் பாதகர் மண்டலத்தை ஜெர்மனியின் குரூர நடபடிகளும் மிலேச்சத்தனமும் படுத்தியிருக்கிற பாட்டை விவரிக்க நாவுகளும் உண்டோ! எழுதினால் ஏட்டில் அடங்குமோ! பன்னி உரைத்தால் பாரத்துக்கு மிஞ்சாதோ! இந்த நாசயுத்தம் லட்சாதிபராயிருந்தோரை பிட்சாதிபராக்கிவிட்டது. லட்சக்கணக்கான மாதுசிரோரண்மணிகளை விதவைகளாக்கிவிட்டது. அநாதபிள்ளைகளானோருக்குக் கணக்கில்லை. ஒலிவமரக் கன்றுகளைப்போல பந்தியைச் சுற்றிலும் உட்கார்ந்து வீட்டை அலங்கரித்த மக்களை இழந்து தவிக்கும் லட்சக்கணக்கான பெற்றோரின் மனம் பற்றி எரியுதே. கல்விக்கடல் கரைகண்ட எத்தனையோ வித்வசிரோமணிகளான வாலிபரை வித்யா உலகம் இழந்து தவிக்கிறது! சூத்திர சாஸ்திரங்களில் பரந்த ஞானமும் விரிந்த பாண்டித்தியமும் உடைய எத்தனையோ பேரை சாஸ்திரீய உலகம் இழந்து வாடி வதங்குகிறது! தேசாபிமானிகளும், பரோபகாரிகளுமான எத்தனையோ வாலிபர் இந்த ஜீவனுள்ளோர் தேசத்தை நீத்துத் திரும்பிவாராப் பாதையாய்ச் சென்றார்கள்! ஐயோ! பரிதாபம்! வடிந்த உதிரத்துக்குக் கணக்குண்டோ! ஒடிந்த கைகால்கள் எத்தனை! மடிந்த வீராதி வீரர் எத்தனை! இடிந்த மாடமாளிகைகள் கூடகோபுரங்கள் எத்தனை! காயப்பட்டுக் குற்றுயிரானோர் எத்தனை! ஜீவபரியந்தம் பிழைப்புக்கடுத்த யாதொரு அலுவலும் செய்யக்கூடாது அங்கவீனராய் விடப்பட்டோர் எத்தனை! திருப்தியடையா அலைகடலுக்குள் துடிக்கத் துடிக்கப் பதைக்கப் பதைக்க ஜீவனோடு மூழ்கினோர் எத்தனை! பீரங்கிக் குண்டுக்கு

இரையாஞேர் எத்தனை! அகழிகளில் மாய்ந்தோர் எத்தனை! ஆகாய விமானங்களால் அடிபட்டோர் எத்தனை! கைதிகளாகித் துயராழியில் மூழ்கி ஒடுக்கத்தின் அப்பத்தைச் சாப்பிடுவோர் எத்தனை! ஆழிக்குள் அமிழ்த்தப்பட்ட மரக்கலங்கள் எத்தனை! அவைகளின் கிரயம் கணக்கில் அடங்குமோ! ஆகாரமின்றிப் பசிபட்டினியினுல் வருந்தி உயிர் துறந்தோர் எத்தனை! கால் வயிற்றுப் போஜனமுமின்றி வாடி மெலிந்து எலும்போடு தசையொட்டிப்போஞேர் எத்தனை! வீடுவாசல் இழந்து தங்கியிருக்கக் கூரையின்றி தெருவும் திண்ணையுமாய் அலேவோர் எத்தனை! வஸ்திரமின்றி வெட்கமும் துக்கமும் பூண்டு திரிவோர் எத்தனை! மேற்கூறிய நாசங்களுக்கும் நிர்ப்பந்தங்களுக்கும் ஜெர்மனியே நீயே உத்தரவாதம் சொல்லவேண்டியது.

இனி இந்தக் கோரயுத்தத்தின் வரலாற்றைக்குறித்துச் சில விபரங்கள் கவனிக்கத்தகும். உத்தேசம் 30, 40 வருஷங்களுக்கு முன் ஜெர்மனி எல்லா வல்லரசுகளுக்கும் மேலான உன்னத நிலைமையை வகிக்கக்கருதி அந்நோக்கத்தை நிறைவேற்ற அந்தரங்கத்தில் யுத்தத்துக்கான பல எத்தன ஆயத்தங்கள் செய்துகொண்டே வந்தது. அது நாளடைவாய்த் தன் சேனையைப் பயிற்றிப் பலப்படுத்தி, அதற்கேற்ற படைக்கலங்களை உண்டுபண்ணி, ஏராளமாய் வெடிமருந்து சவதரித்துப் பென்னம்பெரிய மருந்துச்சாலைகளையும் கட்டி பலப்படுத்திக் கொண்டு வந்தது. யுத்தத்துக்கான அற்பக் காரணமாவது எப்போ சம்பவிக்குமென்று காத்துக்கொண்டே இருந்தது. 1914-ம் வருஷம் ஜெர்மனி தன் சேனுபலத்தில் முழுநம்பிக்கைவைத்து, பிரித்தானியா யுத்தத்தைக்குறித்த யாதொரு எண்ணமும் அதற்கேற்ற யாதொரு ஆயத்தமும் இல்லாதிருந்த உற்ற தருணம்பார்த்து யுத்தம் கூறி, உலகமுழுவதையும் இந்த நாசப்போருக்குள் அமிழ்த்திவிட்டது. உலகச்சரித்திரத்தில் இத்தகையப் பயங்கரமும் மிலேச்சத்தனமுமான யுத்தம் நடைபெற்றிருப்பதில்லை. ஜெர்மனி உடன்படிக்கை எழுதப்பட்ட பத்திரங்களை உபயோகமற்ற தாள்துண்டாகப் பாவித்து, நீதி நியாயத்தைக் காலால் மிதித்து மேட்டிமையும் ஆங்காரமுமான ஆவியுடன் யுத்தம் தொடுத்தது.

ஒரு சிறு கோழிக்குஞ்சின்மேல் உராஞ்சித் தன் கூரிய நகங்களால் அதைக் குற்றுயிராக்கி எடுத்துப் பறக்கும் பருந்தைப்போல ஜெர்மனி முதல் முதல் சிறு இராஜ்யமாம் பெல்ஜியத்துக்கு நேராய்த் தன் பலத்த சேனையை அனுப்பி அதை ஒரே அடியாய் அடித்து சர்வநாசம் செய்து, நிரபராதியான அரசரையும் இராஜ்யத்தைவிட்டு ஓடச்செய்து தன் கொடியை அத்தேசத்தில் நாட்டி இராஜ்யத்தையும் கவர்ந்துகொண்டது. இந்த ஜெயத்தால் ஜெர்மனி ஆங்

காரம் மிகுத்து ஜெயப்பேரிகை முழக்கி இரண்டு வாரத்துக்குள் பிரான்ஸ் தேசத்துப் பாரீஸ் தலைநகரியையும் ஜெயித்துத் தன் கொடியை நாட்டுவதாகப் பிரஸ்தாபித்தது. ஆரம்பத்தில் ஜெர்மனி மேற்கொண்டுவிடுமோ என்று எண்ணத்தக்கதான ஜெயங்கள் அதற்குக் கிடைத்தது வாஸ்தவமே. ஜெயம்பெற்ற சேவல் வீட்டுக் கூரைமேலேறிக் கொக்கரித்தாப்போல ஜெர்மனியின் கொக்கரிப்பு அவனி எங்கும் எதிரொலித்தது. இந்த எதிரொலியால் பயந்திரிந்த சில இராஜ்யங்கள் நியாயமாய் பிரித்தானியாவின் பக்கத்தில் சேர்ந்து யுத்தஞ்செய்யக் கடமைப்பட்டிருந்தும் ஜெர்மனியே தஞ்சம் என்று அதோடு ஐக்கியப்பட்டுக்கொண்டது.

இத்தறுவாயில் இந்திய மன்னர் பலர் பிரித்தானியா நேருக்குத் தங்கள் உண்மையான இராஜபக்தியை வெளியிட்டு பொருள் உதவி புரிந்து ஆள் உதவியும் அளித்தனர். ஆஸ்திரேலியா, கானடா முதலிய நாடுகள் தங்கள் ஆட்களாலும், பணத்தாலும், தவசக்கோப் பாலும் சகாயம்புரிய மனம் உவந்து முன்னுக்குவந்தன. கடைசியாய் ஜெர்மனியின் ஆணவத்தையும், மிலேச்சத்தனமும் குரூரமுமான நடபடிகளையும் கவனித்த அமெரிக்கா, தான் நிர்பட்ச நிலைமையி லிருந்துவிடுவது அநீதி என்று நன்குணர்ந்து, உடுக்கை இழந்தவன் கைபோல இடுக்கண் தவிர்க்க விரைந்து சென்றது. அமெரிக்காச் சேனையும், பணமும், தானியமும் ஆபத்துக்காலத்தில் உதாரத்துவ மாய் விரயஞ்செய்யப்பட்டது.

அமெரிக்கத் துணைப்படை ஐக்கியச்சேனையோடு சேர்ந்து யுத் தஞ்செய்யத் தலைப்பட்ட காலமாகிய கடந்த ஜூலை மாசமுதல் பிரித் தானியாவுக்கு அதிசய வெற்றிகள் பிரூபித்தன. இதை உற்றுக் கவனித்த ஜெர்மனியின் நேசர் ஒருவர்பின் ஒருவராய் அதைக் கைவிட யோசித்தனர். முதல் முதல் கைஸர் மன்னரின் உற்ற சிநேகிதராய் விளங்கிய பல்கேரிய அரசர் தீர்க்காலோசனைக்குப் பின் பிரித்தானியாவின் பாதம் பணிந்தனர். இதைக் கூர்மையாய்க் கவனித்திருந்த துருக்கியும் பல்கேரியாவின் முன்மாதிரியே உசித மென்றுணர்ந்து சில நாட்களுக்குப்பின் பிரித்தானியாவைச் சரண டைந்தது. மேற்கூறிய சம்பவங்களை சிந்தைதெளிந்து ஆலோசித்து ஆஸ்திரியாவும், ஈற்றினில் ஜெர்மனியும் அடிபணிந்திருக்கிறது. இந்தயுத்தத்தில் நாடிழந்த பெல்ஜியம் மன்னர் திரும்பச் சிம்மாச ஞாதிபதியாகிருர். அரசிழந்த அந்தக் காவலர் தைரியம் குன்ருது கடைசிவரை ஐக்கியச்சேனையோடு சேர்ந்து வீரியமாய் யுத்தஞ் செய்து தமக்கு அழியாப் புகழை நிலைநிறுத்தியிருக்கிருர். இந்த யுத்தத்தின் காரியாதிகளை விற்பன விவேகமாய் நடத்திய ஜார்ஜ்

சக்கரவர்த்தி, உவில்ஸன் பிரஜாதிபதி, ஆஸ்குவித், லாயிட் ஜியார்ஜ் முதலிய மதிமந்திரிகள், பாக், பிறெஞ்சு முதலிய தளகர்த்தர்கள், மற்றும் கனவான்களாஞேரின் அருஞ்செயல்கள், மெய்யாகவே அவர்கள் தேசாபிமானிகளான புருஷோத்தமரென அலைகடல் சூழ் அவனி எங்கும் பறைசாற்றிக் கூறுகின்றன.

இனிமேல் வையகத்தில் இத்தகைய நாச யுத்தம் நடைபெருவண்ணம் ஏற்ற ஏற்பாடுகள் நிருபிக்கப்படும் என எதிர்பார்க்கப்படுகிறது. ஜெர்மனி முதலிய அடிபணிந்த தேசங்கள் போர்க்கப்பல்களில் பெரும் பாகத்தையும் படைக்கலங்களையும் பிரித்தானியாவுக்கு ஒப்புவிக்கிறது. ஐரோப்பா முழுவதிலும் புது ஏற்பாடுகள் அமைக்கப்படும். சமாதானமும், சுகவாழ்வும், சௌபாக்கியமும், கடவுள் கடாட்சமும் பிரித்தானியக் கொடியைச் சூழ்ந்து நிற்பதாக. சமாதானப் பிரபுவாகிய இயேசுகிறிஸ்துவின் ஆவி இனிமேல் சர்வ லோகத்திலும் வியாபிப்பதாக.

INDUSTRIAL EDUCATION

கைத்தொழில் பயிற்சி

கைத்தொழில் பயிற்சியாகத் தற்காலம் பல இடங்களிலும் பாய் பின்னல், கெசவுவேலை, லேஸ்வேலை (lace work), பல தையல் வேலை, டேப் செய்தல், தட்டிசெய்தல் முதலியவை கற்றுக்கொடுக்கப் படுகிறது. இவ்வகைத் தொழில்களில் ஒன்றில் அல்லது கூடுமானுல் பலதில் பழகிக்கொள்வது நல்லது. ஏனென்ருல் தற்காலம் இருக்கும் படிப்பினுல் வகிக்கும் உத்தியோகங்கள் ஏதுகாரணத்தினுலும் தடைப்பட்டால் கைத்தொழில் அறிந்தவர்கள் அதால் யாதாம் வேலை செய்து ஜீவனுர்த்தம் நடத்தலாம்.

ஐரோப்பாவில் நடந்த பயங்கரமான யுத்தத்தால் ஐரோப்பாவின் தேசங்கள் பலவற்றின் கைத்தொழில்கள் முன்போல் நடவாமல் தடைப்பட்டு, அங்கிருந்து நமக்கு வந்த தீக்குச்சிப்பெட்டிகள், பல சிட்டித்துணிவகைகள், சிலேற் (slate), தாள், பேனு, சர்க்கரை முதலியவை முன்போல நமக்கு வருவதற்கிடமில்லை; இவற்றை இத் தேசத்தில் செய்வாருமில்லை. எவ்வளவு ஏராளமாகவோ இவை இங்கு உபயோகிக்கப்பட்டுவருகிறது. இத்தேசத்தார் கைத்தொழில்களைக் கற்று ஒன்றுசேர்ந்து செய்யத்தொடங்காமல் மற்றத் தேசங்களையே சார்ந்திருக்கிருர்கள். ஜப்பான் உற்சாகங்கொண்டு பல வேலைகளைத் தொடங்கி மும்முரமாகச் செய்து பல சாமான்களை நமக்கு அனுப்பு

கிறது. இதே நம்முடைய தேசக்குறைவைக் காட்டுகிறதல்லவா! யுத்தத்திற்குமுன் ஜப்பானிலிருந்து 65 லக்ஷம் ரூபாய் சாமான் நமக்கு வந்துகொண்டிருந்தது, இப்பொழுதோ 2 கோடியே 28 லக்ஷம் ரூபாய் பெறுமான சாமான் வருகிறது. அப்படியே கைத்தொழில் செய்யப்படவேண்டிய சாமான்கள் அங்கிருந்து ஜப்பானுக்கு முன் அனுப்பினதைவிட 2 அல்லது 3 மடங்கு அதிகமாக அனுப்பப்பட்டு வருகிறது. பல்விளக்கும் புரூஸ் எளிதில் எங்கும் செய்யப்படக் கூடியது. என்றாலும் அதையும் அதைப்போலொத்த பல பொருட்களையும் நம்மவர் செய்ய விருப்பமற்றிருப்பதால், அவைகள் அங்கிருந்து ஏராளமாக இங்குவந்து சொற்பகிரையத்திற்கு விற்கப்படுகிறது. இவைகளுக்குரிய செய்கூலி லாபம் முதலியவைவ் ஜப்பானுக்கே செல்லுகிறது.

கைத்தொழில்களைக் கற்று, அவற்றால் ஜீவனார்த்தம் கழிப்பதை நாம் இழிவு என்று எண்ணுகிறோம். இது அதிகப் புத்தியீனமே. எப்படியென்றால் யூதர் தங்கள் பிள்ளைகளுக்கு கூடாரஞ்செய்தல், தோல் பதனிடல், தச்சுவேலை, மற்றும் பல கைத்தொழில்களைச் சாதாரணகல்வியோடு கற்றுக்கொடுக்கிறார்கள். அவர்களின் பிள்ளைகள் ஒரு காலத்திலும் குறைவுபட்டு வருத்தமடையாமல் எவ்விதத்திலும் ஜீவனார்த்தஞ் செய்யக்கூடும்.

இங்கிலாந்து, அமெரிக்காவிலுள்ள ஐக்கிய மாகாணங்கள், ஜெர்மனி முதலிய தேசங்கள் தங்கள் கைத்தொழில்களின் வல்லமையினாலேயே பலத்து செல்வத்திலும், அந்தஸ்திலும் முன்னேறி வந்திருக்கிறது.

ராஜகுடும்பத்து பிள்ளைகள் கப்பலிலும் பலவகைத் தொழிற்சாலைகளிலும் நடக்கும் வேலைகளைக் கற்கவென்று இவ்விடங்களில் பல நாட்களைக் கழித்து, அவ்வேலைகள் மேல்பார்ப்போர்களுக்குக் கீழ்ப் படிந்து, நடக்கும் வேலையைக் கற்று வெளியேறிப்போகிறார்கள். ருஷியா தேசத்தில் காலஞ்சென்ற சக்கரவர்த்தியாகிய Peter the Great (பெரிய பேதுரு) என்பவர் தம் ஜீவகாலத்தில் மிச்சமான பாகத்தை இவ்வித கைத்தொழில்களை அத்தேசத்தில் பரவச்செய்வதிலேயே பின்னிட்டார்.

மகமதியர் தங்கள் பெண்கள் வீட்டை விட்டு வெளியே போகாவிட்டாலும் உள்ளேயிருந்தே செய்யக்கூடிய பாய் பின்னல், அப்பளம் போடல், பலவகைப் பலகாரங்கள் செய்தல், ஊறுகாய்கள் தயார்செய்தல் முதலியவற்றைச் செய்து அப்பண்டம் பதார்த்தங்களை வெளியே அனுப்பி விற்று பிழைக்கத்தக்கதாகப் பழக்கிவிடுகிறார்கள்.

தற்காலம் நமது ராஜாங்கமே சாதாரணப் படிப்போடு தோட்ட வேலை, சமுசாரித் தொழில், தச்சுவேலை முதலிய பலவகைத் தொழில்களும் கற்றுக்கொடுக்கப்படவேண்டுமென்று விரும்புகிறது.

இதற்கேற்ற கைத்தொழிற்சாலைகள் பல இடங்களிலும் ஏற்பட்டிருக்கின்றன. சில மிஷன் ஸ்தானங்களிலும் இவ்வித கைத்தொழிற் சாலைகள் உண்டு.

அமெரிக்கா முதலிய இடங்களில் பெரிய பரீட்சைகளுக்குப் படிக்கிறவர்கள் பல கைத்தொழில் வேலையினால் தங்களைத் தாபரித்துக்கொண்டே மேற்படி பரீட்சைகளைக் கொடுத்து, பேர்வாங்கின மனுஷராகிறார்கள். நம் தேசத்திலும் சிலர் அப்படியே பெரிய உதவி அடைந்திருக்கிறார்கள். ஆகையால் நாம் இப்படிப்பட்ட கைத்தொழில்களை அவமதியாது அவற்றால் அடையக்கூடிய பிரயோஜனத்தை அடைந்து நம்மவர்கள் கல்வியிலும் மற்றவைகளிலும் முன்னேறிச் செல்லத்தக்கதாக இச்சாதனங்களை ஏற்ற காலங்களில் நன்றியறிதலுள்ளவர்களாய்ப் பிரயோஜனப்படுத்திக்கொள்ளுவோமாக.

நாகரீகமடைந்துவரும் ஒவ்வொரு தேசத்திலும் கைத்தொழில் வேலை அதிக அவசியமும் முக்கியமுமான விஷயமாக எண்ணி தங்கள் பிள்ளைகளுக்குக் கற்றுக்கொடுத்து வருகிறார்கள். நாகரீகத்தில் முன்செல்லும் நம்தேசத்திலும் இக்காலத்தில் ஷெ கைத்தொழிற் பயிற்சிகளை நன்குமதிக்கவேண்டியது அவசியமான விஷயமே. இதில் முன்னுக்கு நிற்கவேண்டியது இந்தியக்கிறிஸ்தவர்களின் கடமை. ஆகையால் இவ்விஷயத்தில் மாதிரிகாட்ட நாம் முன்னுக்கு வந்து கைகொடுப்போமாக. கர்த்தர் இவ்விஷயங்களின் மூலமாய் நல் கிறிஸ்தவ கூட்டத்தை ஆசீர்வதித்து விர்த்திக்கச் செய்வாரென நம்புவோமாக.

A JOURNEY TO HEAVEN

பரம ஊருக்குப் பிரயாணஞ்செய்தல்

மானிடராகிய நாமெல்லாரும் இவ்வுலகில் ஓர் சத்திரத்தில் சஞ்சரிக்கிறதுபோல் சஞ்சரிக்கிறோம். நமது சொந்த ஊராகிய பரம ஊருக்குச் செல்லவேண்டியவர்களா யிருக்கிறோம். 'பரம ஊருக்குச் செல்ல வழி எது? டிக்கெட் என்ன விலை?' என்று பார்ப்போம்.

நாம் இங்கு ஓர் ஊரிலிருந்து இன்னொரு ஊருக்குப் போக வேண்டுமானால், நமக்கு ரெயில்வே பாதை போடப்பட்டிருக்கிறது புகைவண்டித்தொடர் ஓடிக்கொண்டே யிருக்கிறது. எங்கெந்த

நேரம் குறிக்கப்பட்டிருக்கிறதோ அந்தந்த நேரத்தில் டிக்கெட் வாங்கிக்கொண்டு போகவேண்டியது. டிக்கெட்டுகளின் விலை, முதல் வகுப்பு, இரண்டாம் வகுப்பு, மூன்றாம் வகுப்புக்கென்று முவ்வகையாய் இருக்கிறது. புகைவண்டி ஒன்றேயாயினும், மூன்று வெவ்வேறு வகுப்புக்கும் மூன்று வெவ்வேறு தொகை செலுத்தவேண்டியிருக்கிறது. பெரும்பாலும் தனவந்தர் முதல் இரண்டு வகுப்புகளிலும், ஏழைகள் மூன்றாம் வகுப்பிலும் செல்லுகிறார்கள்.

பரம ஊருக்குப் போகவும் பாதை செவ்வை பண்ணப்பட்டிருக்கிறது. வழியோ மூன்று அல்ல. தனவந்தருக்கு ஒரு வழி, ஏழைகளுக்கு இன்னொரு வழி அல்ல. ஐசுவரியவான்களும் தரித்திரரும் ஏகமாய் ஒரே வழியாய்த்தான் போகவேண்டியது. அந்த வழி இன்னதென்பதைக் குறித்து பரமராஜா தமது சட்டப்புத்தகத்தில் குறிப்பித்திருக்கிறார். அந்த வழி எது? 'நானே வழியும் சத்தியமும் ஜீவனுமாயிருக்கிறேன். என்னாலொழிய ஒருவனும் பிதாவண்டைக்கு வரான்.' 'நானே வாசலாயிருக்கிறேன். என்னால் ஒருவன் உட்பிரவேசித்தால் அவன் இரக்ஷிக்கப்படுவான்.'

இந்தப் பரமராஜா இன்னுமோர் இடத்தில் நாம் போகவேண்டிய வழி இன்னதென்றும், போகத்தகாத வழி இன்னதென்றும் காண்பிக்கிறார். 'இடுக்க வாசலால் உட்பிரவேசியுங்கள். அதேனென்றால் கேட்டுக்குக் கொண்டுபோகிற வாசல் விரிவும், வழி விசாலமுமாயிருக்கிறது. இதற்குட் பிரவேசிக்கிறவர்கள் அநேகம் பேர். ஜீவனுக்குக் கொண்டுபோகிற வாசலோ இடுக்கமும், வழி நெருக்கமுமாயிருக்கிறது. இதைக் கண்டுபிடிக்கிறவர்கள் செ... சம்பேர்.' இடுக்கவழியில் போவது எல்லோருக்கும் வெகுத்தின் ... மான காரியந்தான்—என்றாலும் என்ன செய்வது! ... வழியே போனாலும், நாம் பிறகு நித்திய பரமானந்த ...த் அடையலாமே.

பரம ஊருக்குச் செல்ல டிக்கெட்டின் விலை ...ன்ன? டிக்கெட்டின் விலையை நாம் செலுத்தவேண்டியதி...லை. விலை வெகு கிராக்கி. எந்த லக்ஷாதிபதியும் பணம்கொண்டு வாங்கவே முடியாது. ஆதலால் நமது அருமை இரக்ஷகர் தமது இரத்தத்தைச் சிந்தி அந்த டிக்கெட்டை வாங்கி வைத்திருக்கிறார். டிக்கெட்டை அவர் கையிலிருந்து வாங்குவதுதான் நமக்காது. நாம் அதைக் கேட்காமலிருந்தால் நமக்கு அது கி... சொல்லுகிறதில்லையா? ... தானே பிழைக்கும்' ...று நாம ... நாம் அதைப் ... கேட்டாலோ விலையுமின்றி ... அவர் கொ... -லாம்.

நாம் சாதாரணமாய் ஊருக்குப் போகவேண்டுமாயின் குறித்த நேரத்தில்தான் போகவேண்டும். நினைத்த நேரத்தில் போகமுடியாது. பரம ஊருக்கோ எந்த நேரமும் போகலாம். வாசல் என்றுந் திறக்கப்பட்டிருக்கிறது.

ரெயில்வண்டி போனபிறகு, 'ஐயோ! வண்டி போய்விட்டதே! தவறிப்போனோமே!' என்று நாம் எப்படித் தியங்குவோமோ, அப்படியே, நாம் நித்திய ராஜாவின் ஊருக்குப்போக முந்திக்கொள்ளாவிடில் இதேதியக்கத்திலாழ்வோம். ஆகையால் பரமராஜா கிருபையாக நமக்கு அளித்திருக்கும் இந்தக் கொஞ்சக்காலத்திலேயே முஸ்திப்பு செய்யக்கடவோம். இந்த வாழ்நாளை வீணாளாக்கி, சன்மார்க்க வழியைவிட்டு விலகி, துன்மார்க்க வழியில் அலைந்து திரிந்து, காலம் முடிந்தபிறகு வருத்தப்படுவதிற் பயனில்லை. 'கதவு பூட்டப்பட்டது' என்று சொல்லப்படும் நாள்வரும். அதற்குப் பிறகு 'ஆண்டவரே! ஆண்டவரே!' என்று கூப்பாடு போடுவதிற் பயனில்லை. அவர் நம்மை அறியேன் என்று சொல்லிவிடுவார்.

ஆகையால், காலத்தைத் தப்பாமற் பிடிப்போமாக. பரமராஜாவை எதிர்கொண்டுபோக முந்திக்கொண்டு அவர் கற்பித்த வழியில் சீராகச் செல்வோமாக.

Lydia Vedanayagam.

LESSONS FOR FAMILY WORSHIP

வேத வாசிப்பு ஒழுங்கு

1919-ஆம் பெப்ருவரிமீ

1 ச.	சங்.	1						
2 ஞா.	„	139. 1—8	11 செ.	லூக்.	2. 36—52	20 வி.	லூக்.	6. 1—16
3 தி.	„	139. 17 —16	12 பு.	„	3. 1—14	21 வெ.	„	6 17—34
4 செ.	லூக்.	1. 1—24	13 வி.	„	3. 15—23	22 ச.	„	6. 35—49
5 பு.	„	1. 18—33	14 வெ.	„	4 1—15	23 ஞா.	„	7. 1—17
6 வி.	„	1. 34—56	15 ச.	„	4. 16—32	24 தி.	„	7. 18—35
7 வெ.	„	1. 57—66	16 ஞா.	„	4. 33—44	25 செ.	„	7. 36—50
8 ச.	„	1. 67—[illegible]	செ.	„	5. 1—16	26 பு.	„	8 1—15
9 ஞா.			19 பு.	„	5. 17—26	27 வி.	„	8. 16—25
					27—39	28 வெ.	„	8. 26—40

C. L. S. PRESS, MADRAS—1919